# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **14 ஏப்ரல் 2019** | **ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

தவக்காலத்தின் இறுதிக்கட்டமாக, குருத்து ஞாயிறு வழிபாட்டிற்கு வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகின்றது. தாவீதின் மகனுக்கு ஓசான்னா முழக்ககங்களோடும், ஒலிவ கிளைகளை கைகளிலே ஏந்திய வண்ணமாய் எபிரேயர் எருசலேமிற்குள் பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணம், தான் இயேசு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதாகவும், மீட்பின் முதல் படியாகவும் அமைகிறது. ஈராயிரம் ஆண்டுகளாய் விடுதலைக்காய், வாழ்வின் விடியலுக்காய் ஏழை எளிய மக்களுக்கு நம்பிக்கையும், புத்துயிரையும் கொடுப்பதாகவும் அமைகிறது. அத்தகைய நாளை நினைவு கூறும் இன்று நாமும் குருத்தோலைகளை உயர்த்தி கொண்டு பவனியில் பங்கெடுக்கின்றோம்.

இயேசுவின் இந்தப் பயணத்தில் பங்கு பெறும் நாம் எந்த இலட்சியத்தை நம் மனக்கண் முன் வைத்துள்ளோம்? வெறும் உலக மாயையான பணம், பதவி, புகழ் இவற்றை மையமாக வைத்துத்தான் நம் இலட்சியங்கள்; அமைகின்றன. அதையும் கடந்தவர்களாக, கிறிஸ்தவர்கள் என்ற பெயர் தாங்கியுள்ள நாமும், இயேசுவைப் போல, அன்புக்காக, நீதிக்காக, ஒடுக்கப்பட்டவர்களின் உரிமை வாழ்வுக்காக, பிறரன்புப் பணிக்காக நம்மையே நாம் அர்ப்பணிக்கக்கூடிய ஒரு உயரிய இலட்சிய வேட்கையை உள்ளத்தில் வளாக்க வேண்டும். இந்த உலகில் நாம் நற்செயல்கள் புரிவதெற்கென்றே படைக்கப்பட்டுள்ளோம் என புனித பவுல் கூறுகின்றார். அதை, நம் இதயத்தின் குரலொலியாக, உள்ளத்தில் உள்வாங்கி, இறைவன் தந்த சாயலுக்கும், உயிர்மூச்சிற்கும் சிறந்த பரிசாக, இயேசுவின் இலட்சியப் பணியிலே நாமும் நம்மையே அர்ப்பணித்து, நம்மையே கரைத்து, அவரன்பை நம்மிலே பிறர் காணச் செய்பவர்களாக, மனிதத்தை மண்ணிலே மலரச் செய்வர்களாக, அமைதியின் தூதுவர்களாக வாழ்ந்திட, அருள் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் நம்மையே முழுமையாக அர்ப்பணிப்போம்.

## புனித வார வழிபாடுகள் மற்றும் திருப்பலி நேரங்கள்




**பெரிய வியாழன் (18-04-2019):**
இரவு 8 மணிக்கு **ஆங்கிலம் மற்றும் தமிழ்** கலப்புத் திருப்பலி நடைபெறும்.

**திருப்பாடுகளின் வெள்ளி (19-04-2019):**
மதியம் 2:30 மணிக்கு சிலுவைப்பாதை, தொடர்ந்து திருச்சடங்குகள். **(ஆங்கிலம்)**
மாலை 6 மணிக்குத் திருச்சடங்குகள், தொடர்ந்து சிலுவைப்பாதை. **(தமிழ்)**

**பெரிய சனிக்கிழமை (20-04-2019):** உயிர்ப்புப் பெருவிழா திருவிழிப்பு திருப்பலி
இரவு 7:30 மணி **(ஆங்கிலம்),** இரவு 11:30 மணி **(தமிழ்)**



**உயிர்ப்பு ஞாயிறு (21-04-2019):**
காலை 7:30, 11:30 மற்றும் மதியம் 1 மணி **(ஆங்கிலம்)**
காலை 9:30 மணி மற்றும் மாலை 6:30 மணி **(தமிழ்)**

## குருத்துவ அர்ப்பணிப்பின் 15 ஆம் ஆண்டு நிறைவு




அன்பார்ந்தவர்களே! இன்று (14-04-2109) நமது அன்புத் தந்தை நித்திய சகாயராஜ் அவர்கள், தனது குருத்துவ அர்ப்பணத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவை இறைவனுக்கு நன்றி சொல்லி நினைவு கூருகின்றார். நாமும் இவரோடு சேர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்தும் இவரது இறை பணிக்காகச் செபிப்போம்.

நம் அன்புத் தந்தைக்கு தூய லூர்து அன்னை ஆலயப் பங்குத் தந்தையர்கள்,
பங்கு மக்கள் சார்பாக வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக!

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.





## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

ST VINCENT DE PAUL HELPS PEOPLE

கடந்த ஞாயிறு (07-04-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4686.75
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 7010.00
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 28-04-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW EVANGELISATION

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 50:4-7 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 22 (21): 7-8,16-17,18-19,22-23 |
| **பதிலுரை:** | என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? |
| **இரண்டாம் வாசகம்:** | பிலிப்பியர் 2:6-11 |
| **வாழ்த்தொலி:** | சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 22:14-23, 56 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

